# இமாலயப் பிரகடனம்

## "ஒவ்வொரு தனிநபரும் சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும், சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு இலங்கை நாடு"

**நாகர்கோட், நேபாளம் - 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி**

**1வது கூற்று**

தங்களுடைய அடையாளம் மற்றும் பெருமையை இழந்துவிடுவோமா என்ற பயம் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத வகையில் நாட்டின் பல்வகைமைத்தன்மையைப் பேணிப் பாதுகாத்தலும், ஊக்குவித்தலும்.

**2வது கூற்று**

பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ளல், உள்நாட்டு உற்பத்தியையும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் ஏனையோரின் முதலீடுகளையும், பங்களிப்பையும் ஊக்குவிக்கக்கூடிய, இலங்கை ஒரு நடுத்தர வருமானம் பெறும் நாடாக வெற்றிப் பாதையில் செல்வதனை உறுதிப்படுத்தக்கூடிய பொருத்தமான அபிவிருத்தி மாதிரிகளைத் தெரிவு செய்தல்.

**3வது கூற்று**

மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப்பகிர்வினை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய, சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடியுரிமையை முன்னிலைப்படுத்தியதும் அதற்கான பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஒரு அரசியலமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் உள்ளவாறான அதிகாரப்பகிர்வினைக் கண்ணியத்துடன் நடைமுறைப்படுத்தல்.

**4வது கூற்று**

ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டினுள் அதிகாரத்தைப் பகிர்தலும், மத, கலாச்சார மற்றும் ஏனைய அடையாளங்களை ஏற்று அத்தகைய அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதோடு இனங்களுக்கிடையிலான மற்றும் மதங்களுக்கிடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உழைப்பதும்.

**5வது கூற்று**

கடந்த கசப்பான காலங்களில் இருந்து கற்றுக்கொள்ள உறுதிகொண்டு, மீண்டும் இவ்வாறான துயரங்கள் ஒருபோதும் ஏற்படாதிருக்கப் பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாக, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒப்புரவு அடைந்த ஓர் இலங்கைக்கான தூர நோக்கு.

**6வது கூற்று**

இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளுக்கும் இதர சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் மதிப்பளித்து, சுயாதீனமான மற்றும் ஆற்றல் வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாக இலங்கையானது ஜனநாயகத்துடன் கூடிய சமாதானமான, வளமான உலக நாடுகள் மத்தியில் தனது பெருமையை நிலைநாட்டுதல்.

கையொப்பமிட்டவர்கள்

வண.மாதம்பாகம அசாஜி திஸ்ஸ தேரர், அனுநாயக தேரர் அம்பகஹபிடிய தரப்பு

வண.சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், பிரதம சங்கநாயக தேரர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்

வண.கிதலகம ஹேமசார தேரர், பிரதம சங்கநாயக தேரர், மேல் மாகாணம்

வண.பேராசிரியர்.பல்லேகந்த ரத்னசார தேரர், செயல் மகாநாயகர் வஜிரவண்ச தரப்பு

வண.கலுபஹன பியரதன நாயக தேரர், உறுப்பினர் - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (2023), தலைவர் - மனிதவள மேம்பாட்டு மையம்

வண.நாரம்பனாவே தம்மாலோக தேரர், சங்கநாயக தேரர் பாததும்பறை

வண.வலதர சோபித தேரர் அனுநாயக தேரர், ஸ்ரீ சதமவண்ச தரப்பு

வண.வாத்துவே தம்மவன்ச தேரர், பிரதி பொதுச்செயலாளர், இலங்கை ராமண்ய நிகாய

திரு.வேலுப்பிள்ளை குகனேந்திரன் உலகத் தமிழர் பேரவை - ஐக்கிய இராச்சியம்

திரு.தனபாலசிங்கம் சுரேந்திரன் உலகத் தமிழர் பேரவை - ஐக்கிய இராச்சியம்

கலாநிதி. சாந்தினி ஜெயறாஜா உலகத் தமிழர் பேரவை - ஐக்கிய அமெரிக்கா

கலாநிதி.கண்ணப்பர் முகுந்தன் உலகத் தமிழர் பேரவை - அவுஸ்திரேலியா

திரு.சிறிகாந்தா பவகுகன் உலகத் தமிழர் பேரவை - ஐக்கிய இராச்சியம்

திரு.பிரகாஷ் ராஜசுந்தரம் உலகத் தமிழர் பேரவை - அவுஸ்திரேலியா

திரு.ராஜ் தவரட்ணசிங்கம் உலகத் தமிழர் பேரவை - கனடா

***சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியமானது*** *பல தசாப்தங்களாக இலங்கையின் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக செயலாற்றி வருகின்ற மற்றும் அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமையாக, எவ்வித பயமும், சந்தேகப்படுதலுமின்றி, சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய அமைதிமிக்க வளமான இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்ற சங்க உறுப்பினர்களது கூட்டணியாகும்.*

***உலகத் தமிழர் பேரவையானது*** *செயல்திறன்மிக்க ஒரு புலம்பெயர் தமிழர் அமைப்பு. இது 2009 இல் ஆயுதப்போராட்டம் முடிவிற்கு வந்தபின்னர் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து வன்முறைகளுக்கும் எதிரான ஒரு அமைப்பு. நீதி, இனஒப்புரவு, பேச்சுவார்த்தையூடான அரசியல் தீர்வு என்ற கோட்பாடுகளுடன் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த இந்த அமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.*